செ.வெ.எண்902 நாள் 04.12.2017

# தோட்டக்கலைத்துறை செய்தி

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஓகி புயல் மற்றும் கனமழை காரணமாக வாழை, மரவள்ளி, ரப்பா், கிராம்பு, நல்ல மிளகு, கமுகு போன்ற தோட்டக்கலைப் பயிா்கள் சேதமடைந்து கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பாதிப்படைந்த பயிா்களுக்கான நிவாரணம் பெறும் பொருட்டு விவசாயிகள் தங்கள் நில உடமை ஆவணங்களான பட்டா நகல் அல்லது நில தீா்வை ரசீது நகல், வங்கி புத்தக முதல் பக்க நகல், ஆதாா் அட்டை நகல் மற்றும் தொலைபேசி / அலைபேசி எண் போன்ற விபரங்களை உடனடியாக தங்கள் பகுதி கிராம நிா்வாக அலுவலா் அலுவலகத்தில் சமா்ப்பிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி வட்டார தோட்டக்கலை அலுவலா்களை அணுகுமாறு கன்னியாகுமரி மாவட்ட தோட்டக்கலை துணை இயக்குநா், திரு.எம்.அசோக் மேக்ரின் அவா்கள் தெரிவிக்கிறாா்.

**தோட்டக்கலை துணை இயக்குநா்**
**நாகா்கோவில்**

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்.கன்னியாகுமரி மாவட்டம்**